## ஊழியர் நலன்புரி நிதியம் - 2019

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் நலன்புரி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று உரித்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானகாசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, ஊழியர் நலன்புரி நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு

அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு

கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பினிவருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| குறித்த நியமத்துடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 42 ஆம் பிரிவின் பிரகாரம், கடந்த வருடங்களின் தவறுகளை திருத்தும் போது கடந்த வருட நிதிக்கூற்றுக்களின் ஒப்பீட்டு தொகைகளை திருத்துதல் (restate) மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக ரூபா 170,391,828 தொகையான பெயரளவு வரி மற்றும் நிறுத்தி வைத்தல் வரி ஆகியவற்றுக்குரிய (Notional tax and withholding tax) கடந்த வருடங்களின் சீராக்கங்கள் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு சீராக்கப்பட்டிருக்கவில்லை. | இது கணக்கீட்டு வழுவொன்றல்ல என்பதுடன், அது கணக்கீட்டு மதிப்பீடுகளிலான வேறுபாடாகும். அதனை இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் 34 முதல் 40 வரையான பிரிவுகளின் பிரகாரம் சரியாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. | பெயரளவு வரி மற்றும் நிறுத்திவைத்தல் வரிகளுக்கு உரியதாக ஆண்டினுள் திருத்தமொன்று மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அதன் காரணமாக இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கடந்த வருடங்களின் வழுக்கள் திருத்தப்பட வேண்டியமை. |
| (ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம், நடைமுறையல்லாத சொத்துக்களின் பயன்பாட்டு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக முழுமையாக தேய்விடப்பட்டிருந்த ரூபா 76,656,104 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டவாறு இருந்தது. அதன் பிரகாரம், ஏற்பட்ட மதிப்பிடப்பட்ட வழு இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பிரகாரம் மீள்திருத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை | நியமத்தின் பிரகாரம் நடைமுறையல்லா சொத்துக்களின் பயன்பாட்டு ஆயட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு, அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு சீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்தினால் பேணிச் செல்லப்படும் 07 வங்கிக் கணக்குகளுக்குரிய வங்கி இணக்கக்கூற்றுக்களில் 18 வருட காலத்தினுள் மதிப்பிழந்த காசோலைகள், வங்கிக் கூற்றில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், நேரடியான வரவு / செலவு மற்றும் இனங்காணப்படாத ஏனைய வைப்புக்களாக ரூபா 10,764 மில்லியன் கூட்டுத்தொகை மற்றும் வைப்புச் செய்யப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படாத காசுக் கட்டளைகள், தீர்வையாகாத காசோலைகள் மற்றும் வழங்கிய போதிலும் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் ரூபா 568 மில்லியன் கூட்டுத்தொகையாக காணப்பட்ட போதிலும், அந்த உருப்படிகளை இனங்கண்டு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான வங்கி இணக்கக்கூற்றில் நிலவிய இனங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்களுக்குரிய தீர்ப்பனவு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், இது வரையிலும் ரூபா 5,234 மில்லியன் மாத்திரம் தீர்ப்பனவு செய்யப்பட்டது. வங்கி இணக்கக்கூற்றில் உள்ள நீண்ட கால மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்காக நிதிச் சபையின் அங்கீகாரத்தின் கீழ் விலைக்கேள்வி நடைமுறைக்கமைய தெரிவு செய்யப்பட்ட Ernst & Young (E&Y) நிறுவனத்தின் பங்குபற்றலுடன் 2020-01-09 ஆந் திகதி அந்த விசேட நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம், வங்கி இணக்கக்கூற்றில் உள்ள நீண்ட காலமாக தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள் 2021 நிதியாண்டிற்கு முன்னர் தீர்ப்பனவு செய்யப்படும். | வங்கி இணக்கக்கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள மதிப்பிழந்த காசோலைகள், வங்கி இணக்கக்கூற்றுகளில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படாத கொடுக்கல் வாங்கல்கள், நேரடியான வரவு / செலவு மற்றும் இனங்காணப்படாத ஏனைய மீதிப்படுத்தப்படாத வங்கி மீதிகள் ஆகியவற்றை துரிதமாக இனங்கண்டு அவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு பொருத்தமான கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | ஒவ்வொரு வங்கி கணக்கிற்கும் உரிய காசுப் புத்தகம் மற்றும் வங்கி இணக்கக்கூற்றின் பிரகாரம், 2019ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அந்த மீதி ரூபா 1,659,712,768 ஆக உள்ளடக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 22,104,755 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. அந்த வேறுபாட்டினை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வங்கிக் கணக்கிற்குரிய வங்கி இணக்கூற்றினை இணக்கம் செய்யும் போது அது வரையிலும் பயன்படுத்தப்பட்ட "கணக்கீட்டு மென்பொருள் SAP" தொழில்நுட்ப விடயமொன்றின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் முதற் காலாண்டில் செயலிழந்தமையால் அறிக்கையிடுவதிலுள்ள தவறுதலின் காரணமாக அந்த வேறுபாடு ஏற்பட்டதுடன், அந்த வேறுபாட்டினை 2020 ஆம் ஆண்டில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி மீதிகள் போன்ற அடிப்படை விடயங்களை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கும் போது போதியளவான சிரத்தை மற்றும் கண்காணிப்பிற்கு உட்பட வேண்டியமை மற்றும் வேறுபாட்டினை இனங்கண்டு துரிதமாக கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கத்தவர் நிதியத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள 7 கணக்குகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 89,707 மில்லியனாக இருந்த போதிலும், அந்த கணக்குகள் தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் அந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 64,291 மில்லியனானமையால் ரூபா 25,416 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்ட போதிலும், அதற்கான இணக்கக்கூற்று கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை. | AS/400 கட்டமைப்பினுள் பேணிச் செல்லப்படும் தனிப்பட்ட அங்கத்தவர் கணக்கு தரவுக் கோவையொன்றின் ஊடாக பொதுப் பேரேட்டிற்கு நாளாந்தம் பதிவேற்றம் செய்து (Upload) பொதுப் பேரேடு நாளதுவரையாக்கப்படும். தனிப்பட்ட கணக்குகளுக்காக கட்டுப்பாட்டு கணக்கொன்று பொதுப் பேரேட்டினுள் பேணிச் செல்லப்படும். AS/400 கட்டமைப்பினுள் காசு அடிப்படையிலும், பொதுப் பேரேட்டினுள் அட்டுறு அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடப்படுகின்றமையால் இந்தக் கட்டமைப்புகள் இரண்டினதும் மீதிகளில் இயற்கையாக வேறுபாடொன்று நிலவுகின்றது. | வேறுபாடுகள் தொடர்பில் இணக்கக்கூற்றுகள் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிலையான சொத்துத் தொகுதிகள் 04 இன் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கிரயம் ரூபா 918,035,505 ஆன போதிலும், பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டுக்கான பட்டோலையில் அந்தக் கிரயம் ரூபா 574,401,532 ஆனமையால் ரூபா 343,633,973 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வேறுபாட்டிற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களின் சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

### 1.5.4 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விடயம் | தொகை | முன்வைக்கப்படாத கணக்காய்வு சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| வாகனங்கள், தளபாடங்கள், கணனி மற்றும் உதிரிப்பாகங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகிய நிலையான சொத்துத் தொகுதிகள் 04 தொடர்பில் 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையிலுமான காலப்பகுதிக்குரிய கொள்வனவுகள். | 308,804,794 | நிலையான சொத்துக்கள் தனித்தனியாக காண்பிக்கப்படும் வகையிலான நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பட்டோலைகள் | பதில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மீதிகள் தொடர்பில் போதியளவில் உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 222,776 மில்லியனான வருமானமாவதுடன், அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் இலாபம் ரூபா 190,617 மில்லியன் ஆகும். அதன் பிராகாரம், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 32,159 மில்லியனான அதிகரிப்பொன்றினை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அங்கத்தவர்களின் பங்களிப்புப் பணம் தொடர்பில் 2012 ஆம் ஆண்டின் போது 11.5 சதவீதமாக செலுத்தப்பட்ட நலன் வீதமானது, 2014 ஆம் ஆண்டளவில் 10.5 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் தொடர்ச்சியாக அந்த வீதம் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டின் போது அந்த வீதமானது 9.25 வீதம் வரையிலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கத்தவர்களுக்கு தமது கணக்கின் மீதியை சரிபார்ப்பதற்காக KIOSK இயந்திரத்தினை பொருத்தும் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் இலங்கை முழுவதிலுமுள்ள 30 மாவட்ட தொழிலாளர் அலுவலகங்களில் நிறுவப்பட்டிருந்த KIOSK இயந்திரம் தொடர்பில் 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது 27 இயந்திரங்கள் செயலற்றிருந்ததுடன், அவற்றுள் 5 இயந்திரங்கள் பொருத்தப்பட்டு ஆரம்ப காலம் முதல் பல்வேறு காரணங்கள் காரணமாக செயலற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. இந்த இயந்திரம் பொருத்தப்பட்ட நிறுவனத்தினால் பல தடவைகள் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதிலும், அங்கத்தவர்களுக்கு தமது மீதிகளை சரிபார்க்க முடியாதிருந்தது. சரியான மதிப்பீட்டு நடைமுறையொன்றில்லாது கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை, இயந்திரத்தின் செயற்படுதன்மை தொடர்பிலான வழிகாட்டிகள் (user manual) மற்றும் முறையான பயிற்சியொன்று வழங்கப்பட்டிராமை, செயன்முன்னேற்றத்தை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யாமை, இயந்திரங்களின் பொறுப்பு மற்றும் கடமை உரிய அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிராமை மற்றும் சரியான இடங்களில் | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய பரிசோதனையின் போது 20 இயந்திரங்கள் செயற்படு நிலையில் காணப்பட்டது. பல்வேறு இயந்திரங்கள் செயற்படுத்தப்பட்டு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ளமையால் அந்த இயந்திரங்களின் பயன்படு ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்பட்டு பெறுமானத்தேய்வு சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை குறிப்பிடுகின்றேன். | அங்கத்தவர் நிதியத்திலிருந்து செலவினம் மேற்கொள்ளும் போது செயற்திறனாகவும், ஆக்கபூர்வமானதாகவும் மற்றும் சிக்கனமாகவும் செயற்படல் நிறுவனத்தின் கடமையாகும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தப்பட்டிராமை (மீண்டும் பதிவு செய்துள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கையை கருத்திற்கொள்ளாமை) போன்ற காரணங்களால் இந்த செயற்திட்டம் முழுமையாக தோல்வியடைந்திருந்தது. அவ்வாறே பொருத்தப்பட்ட திகதி முதல் 5 வருடங்களேனும் கடப்பதற்கு முன்னர் இவ்வாறு இயந்திரம் பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தமையின் காரணத்தால் செயற்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட செலவினம் நட்டமாக அமைந்திருந்தது. | | |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கத்தவர்களாக தம்மைக் காண்பித்து போலியான நபர்களினால் நலன் தொகைகள் விடுவிக்கப்பட்டிருந்த 64 சந்தர்ப்பங்கள் இனங்காணப்பட்டிருந்தது. அவற்றுள் 61 சந்தர்ப்பங்களுக்காக 2004 நவம்பர் 04 ஆந் திகதி முதல் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி வரையிலும் நிதியத்திற்கு செலவினமொகும் வகையில் ரூபா 52,316,484 செலுத்தப்பட்டிருந்ததுடன், 3 சந்தர்ப்பங்களுக்குரிய ரூபா 3,393,727 ஆன தொகை தொடர்ந்தும் செலுத்த வேண்டியிருந்தது. அந்த சந்தர்ப்பங்கள் தொடர்பில் முறையான உள்ளக விசாரணையொன்றினை மேற்கொள்ளவும் உள்ளக உத்தியோகத்தர்களினால் | மோசடியான முறையில் நலன்களை செலுத்துதல் தொடர்பில் தகவல்கள் வெளிப்படுவது, உண்மையான அங்கத்தவர் நலனுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தின் என்பதுடன், அப்போது குறித்த கொடுப்பனவை மேற்கொண்டு நெடுங்காலம் கடந்திருப்பதனால், அந்த சந்தர்ப்பத்தில் உள்ளக விசாரணையொன்றினை மேற்கொள்ளல் நடைமுறைச் சாத்தியமற்றது என்பதால், எதிர்காலத்தில் மோசடியான கொடுப்பனவுகள் தொடர்பில் அவை இனங்காணப்பட்ட சந்தர்ப்பத்திலேயே உள்ளக விசாரணையொன்றினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேசடியான கொடுப்பனவுகள் தொடர்பில் முறையான உள்ளக விசாரணையொன்றினை மேற்கொண்டு, உள்ளக உத்தியோகத்தர்களினால் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதா என்பதை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாக விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு நிதியம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டு முதல் இலங்கை மத்திய வங்கியினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த இணையத்தளம் மூலம் கணக்கு மீதிகளை சரிபார்க்கும் வசதி தொடர்பில் உரிய முறையில் பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையால், அந்த முறைமை அங்கத்தவர்களிடையே பிரபலமடைந்திருக்கவில்லை. அவ்வாறே, தொழிலாளர் திணைக்களத்தினால் அங்கத்தவர்களின் கணக்கு மீதிகளை சரிபார்ப்பதற்காக பொருத்தப்பட்ட KIOSK இயந்திரங்களில் பெரும்பாலானவை செயலிழந்து காணப்பட்டமையால், அந்த இயந்திரங்களை பயன்படுத்தி கணக்கு மீதிகளை அறியும் வசதியும் எதிர்பார்த்தவாறு அங்கத்தவர்களுக்கு கிடைத்திருக்கவில்லை. அதன் பிரகாரம், .6 மில்லியன் எண்ணிக்கையான ஊழியர் நலன்புரி நிதியத்தின் செயற்பாட்டு அங்கத்தவர்களுக்கு தமது கணக்கு மீதிகளை விசாரிப்பதற்கு துரிதமானதும் இலகுவானதுமான முறைமையொன்றினை நிறுவ முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | தபால் மூலம் மற்றும் இலத்திரனியல் தபால் மூலம் விண்ணப்பித்தல், இலங்கை மத்திய வங்கிக்கு சென்று விசாரித்தல், தரவிறக்கம் செய்யப்பட்ட மீதிகளை விசாரிக்கும் சேவையில் பதிவு செய்தல் ஆகியவற்றின் மூலம் தொலைபேசிகளுக்கான குறுந்தகவல்கள் மூலம் விசாரித்தல் ஆகிய முறைகளை பின்பற்றி தற்போது கணக்கு மீதியை சரிபார்க்க முடியும். தனிப்பட்ட அங்கத்துவ கணக்குகளுக்கு பணத்தை செலவு வைத்து குறுந்தகவல் அனுப்புதல் மற்றும் இணையத்தள மீதி விசாரணை சேவைகள் ஆகியவற்றுக்காக திணைக்களத்தின் வலைதளத்தினை மேம்படுத்தல் போன்ற செயற்திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டவாறு உள்ளது. | அங்கத்தவர்களுக்கு தமது கணக்கின் மீதிகளை விசாரிப்பதற்கு துரிதமான மற்றும் இலகுவான முறையொன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதியத்தின் அங்கத்துவ நிதியத்தினுள் உள்ள தொழில் ஆணையாளர் கணக்கில் தொழில் தருநர்களுக்கு எதிராக வழக்கு தொடர்வதன் மூலம் அறவிடப்பட்டிருந்த 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக ரூபா 10,711 மில்லியனான தொகை மற்றும் அவ்வாறு வழக்கு தொடர்வதன் மூலம் அறவிடப்பட்டிருந்த தீர்ப்பனவு செய்யப்படும் வரையிலும் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 398 மில்லியன் தொகையினை ஒவ்வொரு அங்கத்துவ கணக்கிற்கும் செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், தொழில் தருநரின் பெயரில் தனித்தனியாக பேணிச் செல்லப்படும் ''நடைமுறை ஆண்டின் பங்களிப்பு பணம் இலக்கம் 01'' எனும் பெயரிலான கணக்கின் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஒரு வருடத்தினை விஞ்சிய ரூபா 30,435 மில்லியன் மீதியானது உரிய அங்கத்தவர்களை இனங்கண்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிறுத்தி வைக்கப்பட்ட நலன்கள் மற்றும் உரித்து கோரப்படாத நலன்களாக ரூபா 860 மில்லியனும் குறை/மிகைப் பங்களிப்பு பணமாக ரூபா 1,843 மில்லியனும் குறை/மிகை நலன்களை செலுத்தலாக ரூபா 784 மில்லியனும் அங்கத்துவ நிதியத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த மீதிகளை இனங்கண்டு தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ''சீ'' அறிக்கைகளில் உள்ள குறைபாடுகள், அங்கத்தவர்களின் வங்கிக் கணக்கு தகவல்கள் குறைபாடுகளுடன் காணப்படல், வழக்கு இலக்கங்களை சரியாக இனங்காண முடியாமை போன்ற காரணங்களால் குறித்த மீதிகளை தீர்ப்பனவு செய்ய முடியாதிருந்தது. குறை நிறை பங்களிப்பு பணக் கணக்கிற்குரிய சரியான தகவல்கள் கிடைத்த பின்னர் தீர்க்க முடியும். | தீர்ப்பனவு செய்யப்படாத பங்களிப்பு பணத்தை தாமதமின்றி தீர்ப்பனவு செய்வதற்கு செயற்திறனான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**3.4 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்கத்தவர்களின் ஆளடையாளத்தினை உறுதிப்படுத்துவதற்காக தொழிலாளர் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த புகைப்பட மற்றும் விரலடையாள செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த 12 எண்ணிக்கையான Quick Cam Camera, 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 1,725,375 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 50 எண்ணிக்கையான Quick Cam Camera மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 3,261,600 செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 24 எண்ணிக்கையான Laptop கணனிகள் ஆகியன மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | வலய அலுவலகங்களில் தற்போது காணப்படும் Quick cam Camera செயலிழக்கும் போது அதற்காக மீளப் பொருத்தும் நோக்கில் 5 வைக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 7 எண்ணிக்கையான Camera எஞ்சியுள்ளன. செயற்திட்டத்திற்காக 2018 ஆம் ஆண்டின் போது Laptop கணனிகள் மாத்திரமும், 2019 ஆம் ஆண்டின் போது Quick Cam Camera மாத்திரமும் கொள்வனவு செய்யப்பட்டமையால் அந்த உதிரிப்பாகங்களை தொகுதியாக்கம் இயலுமை காணப்படவில்லை. | உரிய தேவைப்பாட்டினை இனங்கண்ட பின்னர் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டியதுடன், அவை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |